# INSTRUCTIONS TO CANDIDATES

1. Candidates should apply only through online in the District Recruitment Bureau's websitewww.drbpdk.in

விண்ணப்பதாரர்கள்www.drbpdk.inஎன்றமாவட்ட ஆள்சேர்ப்பு இணையதளம் மூலம் இணையவழி மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்..

2. All candidates have to furnish their correct SSLC /HSC/Degree Register Number, Month and Year of passing and Name of the Board/University, which issued the Certificate. Any details found to be wrong, the online Application is liable for rejection at any stage.

விண்ணப்பதாரர்கள் இணைய வழியாக உள் நுழையும் போது கேட்கப்படும் SSLC/HSC பட்டப் படிப்பு பதிவு எண், தேர்ச்சி பெற்ற வருடம் மற்றும் மாதம், சான்றிதழ் வழங்கிய குழுமம் /பல்கலைக்கழகம் ஆகிய தகவல்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும். மேற்படி விபரங்கள் தவறாக இருப்பின் தேர்வுக்கான விண்ணப்பம் எந்தவொரு நிலையிலும் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

**3.** Candidate who has more than one SSLC mark sheet should enter the details available in the marks sheet issued after final attempt in which he/she had passed the SSLC examination.

ஒன்றுக்கு மேற்பட்டSSLCசான்றிதழ்கள் வைத்திருப்பவர்கள், தாங்கள் இறுதியாகத் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற சான்றிதழில் உள்ள விபரங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

**4.** A valid e-mail ID and Mobile Number is Mandatory for applying through online. E-mail ID and Mobile Number should always be kept in active. District Recruitment Bureau will send all communications and messages to the candidates registered e-mail ID and Mobile Number.

இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கு, பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகியவை கட்டாயம் ஆகும். மின்னஞ்சல் முகவரி, கைப்பேசி எண் ஆகியவற்றைத் தொடர்ந்து பயன்பாட்டிலேயே வைத்திருக்க வேண்டும். தேர்வு தொடர்பான செய்திகள் அனைத்தும் விண்ணப்பதாரர் பதிவு செய்துள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் ஆகிவற்றில் மட்டுமே அனுப்பப்படும்.

**5.** The details furnished by the candidate in the recruitment specific application will alone takeninto account.

விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை அவர்கள் குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது அந்த விண்ணப்பத்தில் பதிவு செய்யும் விவரங்கள் மட்டுமே அந்தத் தேர்வுக்காக அவர்கள் தரும் விவரங்களாக எடுத்துக் கொள்ளப்படும்.

6. Please note that all the particulars mentioned in the online application including Name of the Candidate, Post applied for, Communal Category, Date of birth, Address, E-mail ID, etc., will be considered as final. Candidates are hence requested to fill in the online application form with utmost care as no correspondent regarding change of details will be entertained

ஒரு குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பத்தில் விண்ணப்பதாரர்கள் தரும் பெயர், விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், சாதிப் பிரிவு, பிறந்த தேதி, முகவரி, மின்னஞ்சல் முகவரி, etc., போன்ற விபரங்கள் இறுதியானவை எனக் கருதப்படும். எனவே, விண்ணப்பதாரர்கள் தங்களது விபரங்களை உள்ளீடு செய்யும் போது மிகுந்த கவனத்துடன் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இணைய வழி விண்ணப்பத்தில் மாற்றம் செய்யக்கோரி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது.

7. The candidates have to use only the following mode of payment.

‘Online’ (Net Banking/Debit Card/Credit Card/UPI)

விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கட்டணத்தை கீழ்காணும் முறை வழியாக மட்டுமே செலுத்த வேண்டும்.

‘Online’ (Net Banking/Debit Card/Credit Card/UPI)

8. When the candidate chooses to pay fees through the online payment gateway an additional page will be displayed wherein candidates may follow the instructions and fill in the requisite details to make payment.

விண்ணப்பதாரர்கள் இணையவழிகட்டணம் செலுத்தும் முறையைத் தெரிவு செய்தால் கூடுதல் பக்கம் திரையில் தெரிய வரும். அந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாகப் பின்பற்றி தேவையான விவரங்களைப் பதிவு செய்து கட்டணம் செலுத்த வேண்டும்.

**9.** After submitting your payment information in the online payment form, please wait for the intimation from the server, DO NOT press back or refresh button in order to avoid payment failure or double charge.

விண்ணப்பக் கட்டண விவரங்களைப் பதிவு செய்த பின்னர் அதற்கான விவரம் திரையில் வரும் வரை காத்திருக்கவும். அதுவரைback or refreshஆகியவற்றைச் கொடுக்காமல் காத்திருக்கவும். இந்நிலையில் பணப் பரிமாற்றம் தடைபடும் அல்லது இரண்டாம் முறையாக பணம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும்.

**10.** If the online transaction is successfully completed, acknowledgement will be generated. Candidates should note this number for further reference.

இணைய வழிக் கட்டணம் செலுத்தும் முறை நிறைவு செய்யப்பட்டவுடன், ஒப்புகை சீட்டு திரையில் தோன்றும். அதனை விண்ணப்பதாரர்கள் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**11.**District Recruitment Bureau reserves the right to change the mode of payment at any time without any intimation.

கட்டணம் செலுத்தும் முறையை மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் எந்த நேரத்திலும் மாற்றுவதற்கு உரிமை உண்டு.

**12.** Candidates need not send the print out of the online application or any other supporting documents to the District Recruitment Bureau.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப நகலினையோ அல்லது சான்றிதழ்களையோ மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு அனுப்பத் தேவையில்லை.

**Note :-**

**குறிப்பு:-**

i) Candidates are advised to apply on-line, well before the closing date and not to wait till the last date to avoid the possibility of disconnection/ inability/ failure to log on to the District Recruitment Bureau website on account of heavy load on internet / website.

விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிக்க குறிப்பிடப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்போது விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது தொழில் நுட்பப் பிரச்சனைகளோ எழ வாய்ப்புள்ளது.

ii) Under no circumstance, a candidate should share/ mention e-mail ID and password or mobile number of any other person. In case a candidate does not have a valid personal e-mail ID, they should create a new e-mail ID before applying on-line and must maintain that e-mail account.

விண்ணப்பதாரர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரி, கடவுச் சொல் அல்லது கைப்பேசி எண் ஆகியவற்றை மற்றவர்களுடன் எந்த ஒரு சூழ்நிலையிலும் பகிர்ந்து கொள்ளக் கூடாது. விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கென மின்னஞ்சல் முகவரி ஏதுமில்லை எனில் அவர்கள் புதிதாக ஒரு மின்னஞ்சல் முகவரியை, விண்ணப்பிக்கும் முன்னர் உருவாக்கிக் கொள்ளவும் அதனைத் தொடர்ந்து பயன்பாட்டில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

iii) Candidatesshould take utmost care while filling the online application. Candidates are requested to fill the online application form with utmost care as no correspondence regarding change of details will be entertained.

விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் போது மிகுந்த கவனத்துடன் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தில் தவறாகக் கொடுக்கப்பட்ட விவரங்களை மாற்றிக் கொள்ள வேண்டி விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு வேண்டுகோளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

iv) Candidatesshould carefully fill the details in the Online Application at the appropriate places and click the 'SUBMIT' button at the end of the on-line application format

Before pressing the 'SUBMIT' button, candidates are advised to verify every particular filled in the application. The name of the candidate or name of his / her father etc., should be spelt correctly in the application as it appears in the certificates/ mark sheets. Any change/ alteration found may lead to disqualification of the candidates.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை மிகுந்த கவனத்துடன் உள்ளீடு செய்து விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமர்ப்பிக்கும் முன்னர் தாங்கள் அளித்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளனவா என சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பதாரர்களின் பெயர், அவர்களது பெற்றோரின் பெயர் ஆகியவற்றை சான்றிதழ்களில் உள்ளபடி மிகச் சரியாக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்படி விவரங்களில் மாற்றங்கள் ஏதுமிருப்பின் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

v) Request for change/ correction in any particulars in the application form shall not be entertained under any circumstances. District Recruitment Bureau will not be

responsible for any consequences arising out of furnishing of incorrect and incomplete details in the application or omission in providing the required details in the application form.

**விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை மாற்ற வேண்டி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் தரும் தவறான, முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.**

vi) District Recruitment Bureau is not responsible for online payment interruption or failure.

**இணையவழிக் கட்டணம் செலுத்தும் முறையில் ஏற்படும் இடர்பாடுகளுக்கும், தோல்விகளுக்கும் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.**

vii) For any clarification you can send your queries to **drbpdk2025@gmail.com.**

**ஏதேனும் சந்தேகங்களுக்கு**drbpdk2025@gmail.com**என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.**

**District Recruitment Bureau**
**Pudukkottai District**